பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை: 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர்: 15] சென்னை: ஆவணி 31உ (16—9—67) சனி ★ வெளியூர்: புரட்டாசி 1உ (17—9—67) ஞாயிறு [இதழ்: 79

செப்டம்பர் 17!

இரண்டாயிரம் ஆண்டுகளாக அஞ்சியும் அடங்கியும், மறைந்தும் வாழ்ந்த தமிழ்ப் பண்பை—குறள்நெறிக் குலத்தை—குவலயம் அறிந்துகொள்ளுமாறு அறைகூவி அழைக்கத் தமிழர்கள் அணி வகுப்பு நடத்திட்ட பொன்னுள்—

கிழக்குலகின் குமரிமுனையில் சனநாயகச் சுடர் மங்காது—அணையாது ஒளிவீசத் தென்னவர்கள் பாசறை அமைத்திட்ட பெருநாள்—

காலனி ஆதிக்கத்தை ஒழித்த பின்பு அந்த இடத்தில் காங்கிரசு ஆதிக்கக் கோட்டையை நிர்மாணிக்கச் செய்த அந்த முயற்சியை முளையிலேயே கிள்ளியெறிய அறிஞர் அண்ணு அவர்களுக்குக் கேடயம் கிடைத்த நன்னுள்—

திராவிட முன்னேற்றக் கழகம் தோற்றுவிக்கப்பட்ட திருநாள்—

செப்டம்பர்-17!

அறிஞர் அண்ணு அவர்கள் பிறந்த 48 மணி நேரத்தில் ஒவ்வோராண்டும் கழகம் 'பிறக்கிறது'! அவர் பெரிதென நினைக்கும் சனநாயகமும் அவரைப் பெரியவராக மதிக்கும் கழகமும் போட்டி போட்டுக்கொண்டு தமிழர்களின் இதயத்தில்—எண்ணத்தில் — வாழ்வில் — இன்பத்தைப் பாய்ச்சும் நாளாக **செப்டம்பர்-17** அமைகிறது!

அண்ணு தமது 40-வது வயதில் சழகத்தைத் தோற்றுவித்து அதன் தலைமைப் பொறுப்பை ஏற்ருர். நபிகள் நாயகம் 40-வது வயதில்தான் தமது மார்க்கத்தைப் பரப்ப முயன்ருர் என்று சமய நூல்கள் சொல்வதைப்போல அண்ணு அவர்கள் தமது 40-வது வயதில் துவக்கிய 'தி. மு. கழகம்' எனும் சனநாயக அமைப்பும், நபிகள் நாயகம் அவர்களின் மார்க்கத்தைப் போலவே உலகுள்ளளவும் நினைவுகூரப்படும் என்பது உறுதி!

அறிஞர் அண்ணு அவர்களுக்கு வயது 58 முடிந்து 59 துவங்குகிறது! கழகத்திற்கும் பதினெட்டு ஆண்டுகள் முடிந்து பத்தொன்பதாவது ஆண்டு தொடங்குகிறது!

கடந்த பதினெட்டு ஆண்டுகளாகக் கழகம் தமிழகத்தின் வாழ்வோடு ஒன்றி—வறுமையோடு போராடி—அறியாமையோடு பொருது—அரசியல் விழுப்புண் பல ஏற்று—இன்று ஆலமராய் -- ஆழிப்பவழத் திட்டாய் -- படர்ந்து தமிழர்களின் வாழ்வில் ஒளி பாய்ச்சிக்கொண்டிருக்கிறது!

தி. மு. கழகம் தோற்றுவிக்கப்படாமலிருந்தால்.........அதன் தலைமைப் பதவியை அறிஞர் அண்ணு ஏற்றுக்கொள்ளாமலிருந்தால்.........?

இந்தக் கேள்விக்கு உலகம் பதில் சொல்வது இருக்கட்டும்; தமிழர்கள் இருக்கமாட்டார்கள்; தமிழ் நாடு—தமிழர் பண்பாடு—குறள் நெறி—சனநாயக அரசியல் ஆகிய அனைத்தும் யாரோ ஒருவருக்குக் குறைந்த விலைக்கு விற்பனை செய்யப்பட்டுவிட்டிருக்கும்! 'மொழி நமது வசதிக்காகத்தானே' என்ற வாதத்தோடு தமிழுக்குச் சாவு மணி அடிக்கப்படும் அவல ஓசையும், நமது காதைத் துளைத்துக் கொண்டிருக்கும்!

1949 செப்டம்பர் திங்களில் நாடு இருந்த கொந்தளிப்பு எத்தகையது என்பதைப் பார்த்தவர்களுக்கு, சழகம் துவக்கப்படாதிருந்தால் ஏற்பட்டிருக்கக்கூடிய இழப்பும் அழிவும், கொந்தளிப்பும் கொடுமையும் எத்தகையன என்பது சரியாகத் தெரியவரும்!

பதினெட்டு ஆண்டுக் காலத்தில் மனிதர்கள் சட்டப்படி 'மேஜர்' ஆகலாம்; ஆனுல், அரசியல் கட்சிக்கு அது மிகவும் இளமைப் பருவமே; என்ருலும், கழகம் தனது 18-வது ஆண்டிலேயே ஆட்சி செய்யும் பொறுப்பைத் தமிழ்ப் பெருமக்களின் ஆணை காரணமாக ஏற்றுக்கொண்டிருக்கிறது!

தி. மு. கழகம் தோற்றுவிக்கப்பட்டதை நினைத்தாலே ஒரு வகைப் பணிவும், மிடுக்கும் ஒவ்வொரு தமிழனுக்கும் ஏற்பட்டே தீரும்! அது ஒரு அற்புத நிகழ்ச்சி! ஆயிரம் ஆண்டுக்கோர்முறை மட்டுமே திடீரென நடைபெறக்கூடிய அரிய நிகழ்ச்சி!

அது இல்லையேல், இன்று இந்தியாவில் சனநாயகம் நம்பிக்கையோடு வாழ முடியாது! தமிழகம் தனது இலக்கிய இலக்கணங்களையே மறந்துபோயிருக்கும்!

இது, உலக அரசியல் கட்சிகளின் வரலாற்றில் அடிக்கடி காண முடியாத சிறப்பு!

இந்தச் சிறப்பினைப் பெற கழகம் முற்றிலும் தகுதியுடையது என்பதில் ஐயமில்லை. ஏனெனில், அது வீரம் மிக்கது—பணிவு நிறைந்தது—பண்புகொண்டது—உறுதி வாய்ந்தது!

கழகத்தின் நற்பண்புகளும், உறுதியும் வீரமும், பணிவும் இன்று போல் எந்நாளும் தென்னுட்டவருக்குத் தொண்டு செய்வதில் முழு அளவு பயன்படும்.

போராட்டக் காலங்களில் கழகத்திற்கு நேர்ந்த அனுபவங்கள், அதனுடைய சுபீட்ச நாட்களிலும் தொடர்ந்து கவனத்தில் கொள்ளப்படும். அறப்போர்களில் அது காட்டிய துணிவு மிக்க பண்புகள், ஆட்சி செய்யும் அதன் தற்போதைய நிலையிலும் தூயதொண்டாற்றத் துணை நிற்கத் தவருது!

கழகம் தோன்றிய அற்புதத்தைப் போலவே, அது சாதித்த சாதனைகளும் பொன்னெழுத்தால் பொறிக்கக் கூடியவை!

அது எதைச் சாதிக்கவில்லை? எல்லாவற்றையும் அது செய்து முடித்திருக்கிறது!

இன்று தமிழர்களின் ஆளுங்கட்சியாகப் பொறுப்பேற்றிருக்கிறது.

இதுவரை செய்தவைகளையும், இனிச் செய்யவேண்டியனவற்றையும் இந்த நாளில் அது நினைவுபடுத்திக் கொள்கிறது!

அதன் சாதனைகளை அதுவே, இனி சொல்லிக்கொண்டிருக்க வேண்டும் என்பதில்லை. தமிழர்களின் வாழ்வு—முன்னேற்றம் ஒவ்வொன்றிலும் அதன் சாதனைமுத்திரைபொறிக்கப்படுவதை யாரும் அறியலாம்—உணரலாம்!

இடுக்கண்கள் ஏற்ற காலத்திலேயே அது மேன்மையுடன் விளங்கியதை உலகம் கண்டிருக்கிறது! அடக்குமுறைகளுக்கும், அதிகார ஆர்ப்பாட்டங்களுக்கும் பணியவேண்டும் என்கிற எண்ணமில்லாமல் அது தொடர்ந்து போராடியிருக்கிறது! சங்கடங்களும், துரோகிகளின் தொல்லைகளும் கோர்வையாக நேர்ந்தபோதும் கழகம் தீரத்துடனும் ஆர்வத்துடனும் பொறுத்துக்கொண்டு சீரிய செயல்களைச் செய்திருக்கிறது! புயல் கடுமையாக ஆக அதன் உறுதி பெருகியிருக்கிறது! இந்தி மொழியின் ஆதிக்கப் பேராசை வெளிப்பட வெளிப்பட, அதனைத் தடுத்து நிறுத்துவதில் கழகமும் சளைக்காமல் புதுப் பலம் நாள்தோறும் பெற்று வருகிறது!

இதுவரை பொதுவாகத் தென்னகத்திற்கும் குறிப்பாகத் தமிழகத்திற்கும் கழகம் ஆற்றிய தொண்டுகளைப்போலவே, இனியும் ஆட்சிக் கட்சியாக அமைந்து [illegible] தொடர்ந்து செய்யக் காத்திருக்கிறது!

அண்ணு புகழ்பாடிய இசை--கவி--கருத்தரங்குகள்!

சென்னை, செப். 15—

அண்ணு பிறந்த நாள் விழாவின் முதல் நாளான இன்று, சென்னைப் பல்கலைக் கழகப் பேராசிரியர்களும், மாணவர்களும் இணைந்து கொண்டாடிய விழா நிகழ்ச்சிகள், மிகச் சிறப்பாக அமைந்தன!

சேப்பாக்கத்திலுள்ள சென்னைப் பல்கலைக் கழக நூற்றுண்டு விழா அரங்கில் (இந்தியாவிலேயே மிகப் பெரியதும், நவீன வசதிகள் கொண்டதுமான குளிர்ச் சாதன மண்டபம்) இவ்விழா நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

கல்லூரிப் பேராசிரியர்கள், பேராசிரியைகள், மாணவ-மாணவிகள், மற்றும் பலதுறைப் பெருமக்களும் குழுமியிருந்தனர்,

(நிகழ்ச்சிகள் விவரம் பின்னர்)

அறிவாளர்களெல்லாம் ஏற்றிப் போற்றும் அண்ணு

உருவச் சிலையைத் திறந்துவைத்து டாக்டர் ஏ. இலட்சுமணசாமி புகழ்மாலை

காஞ்சிபுரம், செப். 15—

"இந்தியாவில் பல மாநிலங்களில் பதவிப் போட்டியும், கட்சி விட்டுக் கட்சி மாறுதலும் நடக்கின்றன; நல்வாய்ப்பாகத் தமிழ்நாட்டில் நல்ல ஆட்சி—நேர்மையான ஆட்சி நடக்கிறது"

என்று, சென்னைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் டாக்டர் ஏ. இலட்சுமணசாமி புகழ்ந்துரைத்தார்.

அவர் தொடர்ந்து பேசியதாவது:—

"அண்ணுதுரை உருவச் சிலையைத் திறந்துவைப்பதில் மகிழ்ச்சி. அவரை நான் முப்பது ஆண்டுகளாகவே அறிவேன். பல தொல்லைகளைச் சமாளித்து வாழ்க்கையில் முன்னேறியவர் அவர்.

"மக்களின் வாழ்க்கைத்தரம் உயர அயராது பாடுபடுகிருர்.

"முதல்வர் அண்ணு அவர்களின் 6 மாத ஆட்சியின் சாதனைகளின் பட்டியல் போட்டு காட்டும் நாள் வரவில்லை என்ருலும், அவர் ஆற்றியுள்ள பணியில் மக்கள் நன்மைச்கான பணிகளே உள்ளன என்பதை என்

மருத்துவக் கல்லூரி மாணவர்கள் அளித்த துயர் துடைப்பு நிதி

முதலமைச்சர் அண்ணு திரட்டி வரும் திவிபத்துத் துயர் துடைப்பு நிதிக்கு, சென்னை ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி மாணவர்கள் சார்பில் ரூ. 1096-க்கான காசோலை உணவமைச்சர் திரு. கே.ஏ. மதியழகன் அவர்களிடம், பல்கலைக் கழக மாணவர்கள் நடத்திய அண்ணு பிறந்த நாள் விழாக் கூட்டத்தில் அளிக்கப்பட்டது.

நாளை கடற்கரைக் கூட்டத்தில்:

நாளை (17—9—67) திருவல்லிக்கேணிக் கடற்கரையில் நடக்கவிருக்கும் அறிஞர் அண்ணு பிறந்த நாள் விழாப் பொதுக்கூட்டத்தில் பல்வேறு கட்சிகளின் தலைவர்கள் பங்கேற்கின்றனர்.

மாலை 4-30 மணி முதல் 5-30 மணி வரை சைதை நடராசன் குழுவினரின் நாதசுர நிகழ்ச்சி நடைபெறும்.

5-30 மணி முதல் 6-30 மணி வரை தஞ்சை வி. பாபு குழுவினரின் கரக ஆட்டம்.

6-30 மணி முதல் 7 மணி வரை நன்னிலம் சதாசிவம் குழுவினர் இசை நிகழ்ச்சி.

அதன் பிறகு சொற்பொழிவுகள் நடைபெறும்.

கூட்ட முடிவில் வாண வேடிக்கைகளும், 'அண்ணு வாழ்க' என்று விண்ணிலே ஒளி காட்டும் வர்ண மத்தாப்பு விடுதல் ஆகியவை நடைபெறும்.

ஆந்திர முதல்வர் வாழ்த்து

சென்னை, செப். 16—

ஆந்திர முதலமைச்சர் திரு. பிரம்மானந்த ரெட்டி அவர்கள், இன்று காலை அறிஞர் அண்ணு அவர்கள் இல்லத்திற்கு வந்து பிறந்தநாள் வாழ்த்துத் தெரிவித்துச் சென்ருர்.

சிவகாசி தி.மு.க. ஊழியர்கள் கூட்டம்

சிவகாசி தி.மு.க. ஊழியர்கள் கூட்டம், 17—9—67 காலை 9 மணியளவில் மகாலிங்கம் திரைப்பட அரங்கில் நடைபெறும்; அமைப்புச் செயலாளர் என். வி. நடராசன் எம்.எல்.சி., எஸ். எஸ். தென்னரசு, பெ. சீனிவாசன் எம்.எல்.ஏ., கா. காளிமுத்து பி.ஏ. ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

மாலை 4 மணிக்கு மஜீத் நினைவு மன்றப் பெயர்ப் பலகையை தேவகிபாண்டியன் திறந்துவைப்பார்; வேலம்மாள் மனோகரன் கழகக் கொடியேற்றுவார்.

ஞல் குறிப்பிடாமல் இருக்க முடியாது.

"அண்ணு அவர்கள் எந்தப் பிரச்சினையையும் நன்ருக அலசி ஆராய்கிருர். நண்பர்களுடனும் அந்தந்தத் துறையில் நிபுணர்களாக உள்ளவர்களுடனும் கலந்துபேசுகிருர், இது சிறந்த பண்பு. இதை எல்லோரும் பின்பற்ற வேண்டும்.

"தமிழக அரசு வகுத்துள்ள கல்விக் கொள்கைக்கு வெளி மாநிலங்களில் நல்ல வரவேற்பு இருக்கிறது. துணைவேந்தர்கள் மாநாட்டில் கலந்துகொள்ள டில்லி சென்றிருந்தபோது இதைத் தெரிந்துகொண்டேன்.

"அரசு செய்யும் நன்மைகளை எதிர்க் கட்சியினர் பாராட்ட வேண்டும். துரதிர்ஷ்டவசமாக இந்த மாநிலத்தில் எதிர்க் கட்சியினர் ஓயாது அரசாங்கத்தைத் தாக்குகிருர்கள்—இது தவருன தாகும்!

நம் நாடு
ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ., பி.எல்.
திருவள்ளுவராண்டு 1998 ஆவணி 31 (16—9—67) சனி

அரசியல் சட்டத்தைத் திருத்த வேண்டும்

ஆங்கில மொழியும் ஆட்சி மொழியாக, இந்தி பேசாத மக்கள் விரும்புகின்றவரை நீடித்து இருந்துவரும்' என, காலஞ்சென்ற பண்டித நேரு கொடுத்திருந்த வாக்குறுதிக்கு, சட்ட உருவம் கொடுக்காமலே காலங்கழித்து வருகிறது இந்திய அரசு! இப்படிக் காலங்கழித்துவருவது குறித்து இந்தி பேசாத பகுதி மக்கள் கவலை தெரிவித்துவருவதுடன், 'அவ்வாக்குறுதிக்குச் சட்ட உருவம் உடனடியாகக் கொடுக்க வேண்டும்' என்றும் இந்திய அரசை வற்புறுத்தியவண்ணம் இருக்கின்றனர். இவ்வாறு வற்புறுத்தி வருவதில், தமிழக மக்கள் சார்பில் தமிழக அரசு முன்னோடியாக இருந்துவருகிறது.

'ஆங்கிலமும் ஆட்சி மொழியாகத் தொடர்ந்து இருந்துவரும்' எனப் பண்டித நேரு கொடுத்த வாக்குறுதியில் இடம் பெற்றிருக்கின்ற சொற்கள் மட்டுமே பொருட்படுத்தக்கூடியதல்ல; அவர் கொடுத்த வாக்குறுதியில் இடம் பெற்றிருக்கக்கூடிய உணர்வுதான் பொருட்படுத்தக்கூடியதாகும்.

அவ்வாக்குறுதியில் இடம் பெற்றிருக்கின்ற உணர்வுக்குச் சிறப்பளித்து, அவ்வாக்குறுதியைச் செயல்படுத்தச் சட்டமியற்றுவதுதான் விரும்பத்தக்கது; இந்தி பேசாத பகுதி மக்களின் விருப்பத்தை முழு அளவில் நிறைவு செய்யக்கூடியதுமாகும்.

ஆனால், பண்டிதர் கொடுத்துள்ள வாக்குறுதியிலிருக்கின்ற உணர்வுக்குச் சிறப்பிடம் தந்து, இந்தி பேசாத பகுதி மக்களின் விருப்பத்தை நிறைவு செய்யக்கூடிய வகையில் இந்திரா காந்தியார் அவர்களைத் தலைமை அமைச்சராகக் கொண்டிருக்கின்ற இன்றைய இந்திய அரசாங்கம் துணியுமா என்பது ஏற்கனவே கேள்விக் குறியாக இருந்திருக்கிறது. அந்தக் கேள்விக்கு இப்பொழுது இடமே இல்லை.

பண்டித நேரு தந்த வாக்குறுதியைச் சட்டமாகக் கொண்டுவர **'உத்தேசிக்கப்பட்டிருக்கின்ற ஆட்சி மொழித் திருத்த மசோதா, நாட்டிலுள்ள எல்லா மக்களின் நலன்களுக்கும் பாதுகாப்பு அளிப்பதாக இருக்கும்'** என, நாடாளுமன்ற விவகார அமைச்சராக இருந்துவரும் டாக்டர் **ராம் சுபாக் சிங்**, செய்தியாளர்களிடம் தெளிவாகக் கூறியிருப்பதைக் கொண்டே, 'நேரு தந்த வாக்குறுதிக்கும்—உத்தேச மசோதாவுக்கும் கடுகளவு உறவுமில்லை' என்பதைத் தீர்மானித்துக்[illegible]

இந்தி பேசாத பகுதி மக்களுக்குப் பண்டித நேரு தந்திருக்கின்ற வாக்குறுதியைச் சட்டமாக்குவது என்ற போர்வையில், இன்றைய இந்திய அரசாங்கம் ஏதோ ஓர் ஆட்சிமொழித் திருத்தச் சட்டத்தை இயற்றப்போகிறது என்பது தெளிவாகிவிட்டது. அத்தகு மசோதா ஒன்றைக் கொண்டுவந்து நாடாளுமன்றத்தில் சட்டமாக நிறைவேற்றப்பட்டாலும், அச்சட்டம், இந்தி பேசாத பகுதி மக்களின் நலன்களுக்குப் பாதுகாப்பாக அமைத்திடப்போவதில்லை என்பதும் கல்லில் செதுக்கிய எழுத்தாகிவிட்டது.

நேரு தந்திருக்கின்ற வாக்குறுதிக்கொப்ப - இயற்றப்படக்கூடிய சட்டம் இல்லாமலிருந்திட்டாலும், அந்தச் சட்டத்தினால் சிறிதளவு பாதிகாப்பாவது இந்தி பேசாத பகுதி மக்களுக்குக் கிடைத்திடக்கூடுமா என்பதும் கேள்விக்குரியதாகும். இந்தக் கேள்விக்கும், கிடைக்காது—இருக்காது—முடியாது—என்ற விடைதான் கிடைத்திடும்.

"1965-ம் ஆண்டு சனவரி 26-ந் தேதி முதற்கொண்டு இந்தி மொழி ஒன்று மட்டுந்தான் இந்தியாவின் ஆட்சி மொழியாகும்" என, அரசியல் சட்டத்தின் வாயிலாக உறுதி செய்யப்பட்டுவிட்டதற்குப் பின்னர், ஆங்கில மொழி மட்டுமே அல்லாது எந்த ஒரு மொழியையும், 'ஆட்சி மொழி' என நாடாளுமன்றத்தால் சட்டமாக்கப்பட்டாலும், அப்படி இயற்றப்படுகின்ற சட்டம், அரசியல் சட்டத்துக்கு முரணானதாகத்தான் சட்டப்படி கொள்ளப்படும்—தீர்மானிக்கப்பட்டுவிடும். இம்முடிவில் இரண்டு கருத்துக்கு இடம் கிடையாது. இந்த உண்மைக்கு விளக்கம் தேவையில்லை. அரசியல் சட்டத்தில் இடம் பெற்றிருக்கக்கூடிய கருத்துக்கு முரணாக, நாடாளுமன்றத்தால் நிறைவேற்றப்படக்கூடிய சட்டங்கள், நீதிமன்றத் தீர்ப்புக்கள் மூலம் அடிபட்டுப்போயிக்கின்றன. இப்படி அடிபட்டுப்போன சட்டங்களுக்கு உயிர் கொடுக்க, அச்சட்டங்களின் உள்ளடக்கத்தை ஏற்றுக்கொண்டு அரசியல் சட்ட விதிகள் பல, ஏற்கனவே திருத்தப்பட்டுள்ளன இவ்வாறு அரசியல் சட்டம் இயற்றப்பட்ட 18 ஆண்டுக்குள்ளாக, 18 முறை திருத்தம் செய்யப்பட்டிருக்கின்றன.

எனவே, நேரு கொடுத்த வாக்குறுதியைச் செயல்படுத்த வேண்டும் என்ற நல்லெண்ணம் இந்தியத் தலைமை அமைச்சருக்கு உண்மையில் கடுகளவாவது இருக்கும்பட்சத்தில், 'இந்தி மொழி மட்டுமே இந்தியாவின் ஆட்சி மொழி' என்ற அரசியல் சட்ட விதியில், 'இந்தியுடன் ஆங்கில மொழியும் இந்தி பேசாத பகுதி மக்கள் விரும்புகின்றவரை தொடர்ந்து ஆட்சி மொழியாக இருந்துவரும்' என, திட்டவட்டமாகத் திருத்தம் செய்திட வேண்டும். அரசியல் சட்டத்திலேயே செய்யப்படும் இத்திருத்தம் ஒன்றின் மூலம்தான், நேருவின் வாக்குறுதிக்கு உயிரூட்ட முடியும். இதைத் தவிர, அதற்கு வேறு வழியில்லை

நாடாளுமன்றத்தில் இயற்றப்படக்கூடிய சட்டத்தின் பயனற்ற தன்மையை, அறிஞர் அண்ணா அவர்கள் அறியாததல்ல அப்பயனற்ற தன்மையை அண்ணா அவர்கள் தெளிவாகத் தெரிந்திருக்கின்ற காரணத்தால்தான், 'கழகத் தலைவர்' என்ற முறையில் அன்றும், 'தமிழக முதலமைச்சர்' என்ற முறையில் இன்றும், 'நேருவின் வாக்குறுதியைச் செயல்படுத்த அரசியல் சட்டத்தில் திருத்தம் செய்தல் வேண்டும்' என்ற கோரிக்கையை வலியுறுத்திவருகின்றார்.

—இரா. செ.

அண்ணா இல்லத்தில் கவர்னர் தம்பதிகள்

அண்ணாவுக்குப் பிறந்த நாள் வாழ்த்துத் தெரிவிக்கும் வகையில், தமிழக கவர்னர் சர்தார் உஜ்ஜல் சிங், தமது துணைவியாருடன் அண்ணா இல்லம் வந்தார்.

அவரை, அண்ணாவின் அணுக்கச் செயலாளர் திரு. சொக்கலிங்கம் வாயிலில் வந்து வரவேற்று உள்ளே அழைத்துச் சென்றார்.

உள்வாயிலில் அண்ணியார் அவர்களும், பரிமளம், இளங்கோ தம்பதிகளும் வரவேற்றனர்.

அண்ணா அவர்களுக்கு கவர்னர் மாலையணிவித்து கைகுலுக்கி வாழ்த்துத் தெரிவித்தார்.

திருமதி உஜ்ஜல் சிங், அண்ணியாரிடம் வாழ்த்தைத் தெரிவித்துப் பேசிக்கொண்டிருந்தார்.

கவர்னர் தம்பதிகளுக்கு சிற்றுண்டி பரிமாறப்பட்டது.

சுமார் அரை மணி நேரம் கவர்னர் தம்பதிகள் அண்ணா குடும்பத்தாருடன் அமர்ந்து உரையாடிக் கொண்டிருந்துவிட்டு, விடை பெற்றுச் சென்றார்கள்.

கவர்னருடன் பேசிக் கொண்டிருந்த நேரத்தில் புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். அவர்களும் வந்துவிட்டார்; அவரை கவர்னருக்கு அறிமுகப்படுத்தி வைத்தார் அண்ணா!

திருமதி உஜ்ஜல் சிங், அண்ணி அவர்களைப் பார்த்ததும், 'நல்வாழ்த்துக்கள்' என்று தமிழில் சொன்னார்.

"என்னில் உங்களைக் காணுங்கள்!"

அண்ணா அவர்கள், அமைச்சரவை அமைத்த ஒரு சில நாட்களில் நடந்த நிகழ்ச்சி இது!

சென்னை செய்தியாளர்கள் சங்கம், தனது சிறிய அலுவலகக் கட்டிடத்தில் அமைச்சரவைக்கு வரவேற்பு அளித்தது.

வழக்கத்துக்கு மாறாக, அன்று பத்திரிகைத் துறையைச் சார்ந்தவர்கள்தான் கூட்டத்தினராக இருந்தனர்.

அதேபோல், வரவேற்புக்கு உரியவர்களும் அமைச்சர்களாக அங்கே வரவில்லை!

'தென்னகம்' கண்டவர்—'அன்னை' நடத்தியவர்—'முரசொலி'த்தவர்—'மன்றம்' அமைத்தவர்—இப்படி அனைவரும், பத்திரிகைத் துறையில் தங்கள் தொடர்புகளை உரிமையுடன் எடுத்துக் கூறினர்!

அவர்களையெல்லாம் கண்டெடுத்த அண்ணா அவர்கள், கடைசியாகப் பேச எழுந்தார்.

"எனது அமைச்சரவையே உங்களைப் போன்று பத்திரிகையாளர்களாக இருந்தவர்களையும், பத்திரிகைகளுக்கு எழுதியவர்களையும் கொண்டதுதான்" என்று துவங்கிய அவர், அடுத்த சில நிமிடங்களில் ஒரு பத்திரிகையாளராகவே மாறிவிட்டார்!

'ஏடா தம்பி! எடடா 'பேனா'வை' என்று எத்துணையோ பேர்களுக்கு 'எழுதி'க் கற்றுக் கொடுத்த அவர்,

"இப்போதும் நான் அந்த வாழ்க்கையினையே விரும்புகிறேன்.

"இதழ்களைப் படிப்பதும், எழுதுகோலை எடுப்பதும், அச்சுக்குச் செய்திகளைத் தருவதும், அதை, 'சரியாக இருக்கிறதா' எனப் பார்ப்பதுமான உங்கள் வாழ்க்கையே ஒரு தனி வகைதான்; அது எனக்குப் பழக்கப்பட்டது மட்டுமல்ல—நான் விரும்பியதும்கூட; எனவே, உங்களில் ஒருவன்தான் முதலமைச்சராகி இருக்கிறேன்; என்னில் உங்களைக் காணலாம்; உங்களை உணர்ந்தவன் நான்"

என்ற கருத்துப்பட அரைமணி நேரம் ஆங்கிலத்தில் உரையாற்றிய அப்போதுதான் அவர்,

"எந்த ஒரு பிரச்சினையையும் எழுதிக் காட்டுவதற்கு 24 மணி நேரத்துக்கு முன்னால் என்னை வந்து தயவு செய்து பாருங்கள்; அந்த அவகாசத்தை நீங்கள் எனக்குத் தாருங்கள்; உங்கள் யோசனைகள் ஏற்றுக்கொள்ளத்தக்கவையாக இருந்தால் மனமுவந்து வரவேற்பேன். உங்கள் விமர்சனங்களுக்கு மதிப்பளிப்பவர், என்னைவிட வேறு யாரும் இருக்கமுடியாது"

என்று, தோழமை கலந்த ஓர் அறிவுரையையும் குழுமியிருந்தோருக்குத் தந்தார்.

மக்களுக்காக அவர் பேசியதை இடையில் இருந்து உலகுக்கு அறிவித்த அவர்கள், அன்றைய தினம், அண்ணா தங்களுக்காகவே பேசிய சிலவற்றை செவிமடுத்து ஏற்றார்கள்!

திராவிடத்தின் எழுஞாயிறு

அறிஞர் அண்ணா அவர்களின் நுண்ணறிவு, பெருவியப்புக்குரியது!

அவருக்கு முன் பேசும் சொற்பொழிவாளரின் ஒரு கருத்தோ, சொற்றொடரோ, அவரது மூளையை அபாரமாக இயக்கிவிடும். அங்கேயே—அப்போதே—சுடச்சுட - கடகடவென்று அந்த முன் பேச்சாளரை மூக்குடைத்துவிடுவார்—அந்தப் பேச்சாளரும் ரசிக்கும் முறையில்!

ஒரு தோழரின் உரையாடல் ஒரு பெரிய கட்டுரைக்குக் கருப்பொருளாகிவிடும்! ஓர் ஆங்கிலத் திரைப்படம் அண்ணா அவர்களின் கற்பனையைத் தூண்டிவிடும்!

வாழ்க்கையைக் கூர்ந்து நோக்கும்—அப்படியே ஊடுருவிப் படம் பிடிக்கும் தன்மையது அவரது உள்ளம்!

கடந்த தேர்தலில், பாமர மக்களின் வாக்குகளைப் பெற—காங்கிரசாட்சியின் ஊழல்களை விளக்க—அவர் கையாண்ட எளிமை நடையும், ஏராளமான

ஏ. பி. சனார்த்தனம் எம்.ஏ.

உவமைகளும் இதற்கு எடுத்துக் காட்டுகள்!

இடத்திற்குப் பொருத்தமாக—யார் யார் கேட்கிறார்களோ அவர்களுக்கேற்றபடி அருமையாகப் பேசுவதில் அறிஞர் அண்ணா அவர்களுக்கு நிகர் அவரேதான்!

அவரது வரவு-செலவுத் திட்டப் பேச்சும், மதுரைப் பல்கலைக் கழகத்துப் பட்டமளிப்பு விழாப் பேச்சும் இதற்குச் சான்றுகள்!

அவரது நாவன்மை, கலைவாணர் என்.எஸ்.கே. அவர்களின் நகைச்சுவை—நாதசுரச் சக்கரவர்த்தியின் குழல்—ஏழிசை மன்னர் எம்.கே. தியாகராச பாகவதர் அவர்களின் தேன் குரல்—இவைகளுக்கு ஈடானது! தமிழர் சிந்தைக்கும் செவிக்கும் இன்பம் ஊட்டுவது!

படித்த படிப்பு—இயக்கத்தில் பெற்ற அனுபவம்—மக்கள் வாழ்க்கையை நுண்ணறிவுடன் பகுத்துப் பார்க்கும் ஆற்றல்—இத்தனையும், அறிஞர் அண்ணா அவர்களைச் சிறப்புடன் இயங்க வைப்பவை!

திராவிடர் வாழ்வின் எழுஞாயிறு அறிஞர் அண்ணா அவர்கள், பல்லாண்டு வாழ்க!

வாழ்த்துவோம்!

[ச. சிவப்பிரகாசம், புதுவை]

வளைந்த வாழ்வை நிமிர்த்திடுவோர்!
வாய்ந்த கொடுமை அகற்றிடுவோர்!
பிளவு பேதம் அறியாமைப்
பீடை வழக்கம் போக்கிடுவோர்!
எளிமைத் தோற்றம் விரும்பிடுவோர்!
ஏழ்மைக் கிரங்கும் பண்புடையோர்!
உளத்தில் நிலைத்து நின்றிடுவோர்!
உவமை காணாத் திறவுடையோர்!

கருதும் மக்கள் துயரமெலாம்
கல்லி எறிய முயன்றிடுவோர்!
அரிதேன் றெண்ணும் நலங்களெலாம்
அமைந்த புதுவாழ் வமைத்திடுவோர்!
சரிந்த நிலையைச் சீர்செய்து
தமிழர் கீர்த்தி வளர்த்திடுவோர்!
பெருமைக் குணஞ்சேர் அறிஞரண்ணா
பிறந்த நாளைப் போற்றிடுவோம்!

சூழ்ந்த இந்தத் தமிழகத்தின்
தொன்மைப் புகழை மாய்த்திடவே
நேர்ந்த பகையின் கூட்டமதை
நெஞ்சம் கலங்கச் செய்திடுவோர்!
தேர்ந்த அறிவின் சுடரொளியாய்த்
திகழும் அறிஞர் அண்ணாவின்
ஆர்ந்த புகழை ஓதிடுவோம்!
ஆயுள் பெருக வாழ்த்துவமே!

சென்னை மாவட்டம் கொண்டாடும் அண்ணா பிறந்த நாள் விழா

நகரில் நடைபெறும் 12 பொதுக்கூட்டங்கள்

சென்னை, செப். 16—

அண்ணா பிறந்த நாளையொட்டி சென்னையில் உள்ள 12 தொகுதிகளிலும், தொகுதிக்கு ஒன்று வீதம் 12 பொதுக்கூட்டங்கள் 12 நாட்கள் நடைபெற ஏற்பாடாகியிருக்கிறது.

நேற்று சென்னை 23-வது வட்டத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் அமைச்சர் கே. ஏ, மதியழகன், என். வி. நடராசன், கி. மனோகரன், எஸ். எஸ். இராசேந்திரன், சி. பா. ஆதித்தனார் முதலியோர் கலந்துகொண்டனர்.

இன்று மாலை சைதைத் தொகுதியில் 99-வது வட்டத்தில் நடைபெறும் பொதுக்கூட்டத்தில் சி. பா. ஆதித்தனார், ஏ. பி. சனார்த்தனம் எம்.ஏ. ஆகியோர் கலந்துகொள்கின்றனர்.

17—9—67 ஞாயிறு பகல் 1-மணியளவில், புதுப்பேட்டை இராசரத்தினம் விளையாட்டரங்கில் விளையாட்டுப் போட்டிகள் நடைபெறும்; பொதுப்பணித் துறையமைச்சர் திரு. மு. கருணாநிதி, அணிவகுப்பு மரியாதையை ஏற்பார்.

நாளைமுதல் நடைபெறும் பொதுக்கூட்டங்கள் விவரம் :—

திருவல்லிக்கேணி

திருவல்லிக்கேணித் தொகுதியில், கடற்கரையில், 17—9—67-ம் நாளன்று சர்வ கட்சியினரான பொதுப்பணித்துறை அமைச்சர் மு. கருணாநிதி, ம. பொ. சிவஞானம் எம்.எல்.ஏ., சி. பி. சிற்றரசு எம்.எல்.சி., எம். ஆர். வெங்கட்ராமன், எஸ். எஸ். மாரிசாமி எம்.பி., எம். கல்யாணசுந்தரம், ஏ. கே. ஏ. அப்துஸ் சமது எம்.ஏ., எம்.பி., நடிப்பிசைப் புலவர் கே. ஆர். இராமசாமி, சி.வி இராசகோபால் எம்.எல்.சி., மற்றும் பலர்.

புரசைவாக்கம்

புரசைத் தொகுதியில் 18—9—67 அன்று வேளாண்மைத்துறை அமைச்சர் ஏ. கோவிந்தசாமி, க. அன்பழகன் எம்.ஏ., எம்.பி., மற்றும் பலர் பேசுவர்.

துறைமுகம்

துறைமுகத் தொகுதி 12-வது வட்டத்தில் 19—9—67 அன்று கல்வி அமைச்சர் இரா. நெடுஞ்செழியன், உள்ளாட்சித்துறை அமைச்சர் எம். முத்துச்சாமி, கி. மனோகரன் எம்.ஏ., எம்.பி., ஏ. வி. பி. ஆசைத்தம்பி எம்.எல்.ஏ., மற்றும் பலர்.

பெரம்பூர்

பெரம்பூர்த் தொகுதி 36-வது வட்டத்தில் 20—9—67-ம் நாளன்று செய்தித்துறை அமைச்சர் டாக்டர் சத்தியவாணிமுத்து, சட்ட அமைச்சர் செ. மாதவன், கி. மனோகரன் எம்.ஏ.,எம்.பி., ஏ.வி. பி. ஆசைத்தம்பி எம்.எல்.ஏ. ஆகியோர் பேசுவர்.

தியாகராயநகர்

தியாகராயநகர்த் தொகுதியில் 93-வது வட்டத்தில் 21—9—67 அன்று செய்தித்துறை அமைச்சர் சத்தியவாணிமுத்து, பொதுநல அமைச்சர் சாதிக் பாட்சா, ஏ. வி. பி. ஆசைத்தம்பி எம்.எல்.ஏ., ஏ. பி. சனார்த்தனம் எம்.ஏ., மற்றும் பலர் பேசுவர்.

மயிலாப்பூர்

மயிலாப்பூர்த் தொகுதியில் 89-வது வட்டத்தில் 22—9—67 அன்று பெரியார் ஈ. வெ. ரா., சட்ட அமைச்சர் செ. மாதவன், இலட்சிய நடிகர் எஸ். எஸ். இராசேந்திரன் ஆகியோர் பேசுவர்.

பூங்காநகர்

பூங்கா நகர்த் தொகுதி 49-வது வட்டத்தில் 23—9—67 அன்று அமைச்சர் இரா. நெடுஞ்செழியன், கி. மனோகரன் எம்.ஏ., எம்.பி. மற்றும் பலர் பேசுவர்.

எழும்பூர்

எழும்பூர்த் தொகுதி 51-வது வட்டத்தில் 24—9—67 அன்று கி. மனோகரன் எம்.ஏ., எம்.பி., மற்றும் பலர் பேசுவார்.

ஆயிரம்விளக்கு

ஆயிரம்விளக்குத் தொகுதியில் 59-வது வட்டத்தில் 25—9—67 அன்று கி. மனோகரன் எம்.பி., சிட்டிபாபு எம்.பி., மற்றும் பலர் பேசுவர்.

வண்ணாரப்பேட்டை

வண்ணாரப்பேட்டை 5-வது வட்டத்தில் 26—9—67 அன்று பொதுநல அமைச்சர் சாதிக் பாட்சா, சி. பி சிற்றரசு எம.எல்.சி., கி. மனோகரன் மற்றும் பலர் பேசுவர்.

சென்னை மாவட்ட தி. மு. க. அமைத்துள்ள விழாக் குழுவினராகிய நீலநாராயணன். சு. பாலன் எம்.சி, டி. கே. கபாலி எம்.சி., டி. சே. பொன்னுவேலு பி.ஏ., தி. சு. நல்லதம்பி எம்.சி., தியாகராயநகர் பாலசுந்தரம் முதலிய பலர் இந்த ஏற்பாடுகளைக் கவனிக்கின்றனர்.

அண்ணா பூங்கா

கருணாநிதி திறந்தார்

சேலம், செப். 10—

ஏற்காட்டு நகரமைப்புச் சார்பில் உருவாக்கப்பட்டுள்ள 'அண்ணா பூங்கா'வை கடந்த வெள்ளிக்கிழமையன்று, பொதுப் பணித் துறை அமைச்சர் திரு. மு. கருணாநிதி திறந்துவைத்தார்.

அண்ணா பிறந்த நாள் வழங்கும் முப்பரிசுகள்!

★

பஸ் கட்டண மாறுதல்

சென்னை, செப். 15—

சென்னை நகரிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் அரசுப் பேருந்துகளில் செய்யப்பட்டிருக்கும் கட்டண மாற்றம் அறிஞர் அண்ணா பிறந்த நாளான இன்று முதல் நடைமுறைக்கு வந்தது.

சென்னை நகரைச் சுற்றிப் பார்க்க விரும்புகிறவர்களுக்கு நகரப் பேருந்து கட்டணத்தில் சலுகை வழங்கும் திட்டமும் செயல்படுத்தப்பட்டது. இதன்படி ரூ. 1.50-க்கு பயணச் சீட்டு வாங்கினால் நகரிலுள்ள எல்லா பேருந்து தடங்களிலும் பயணம் செய்யலாம். ஞாயிற்றுக்கிழமைகளிலும் மற்றும் அரசு விடுமுறை நாட்களிலும் பயணம் செய்ய இப்பயணச் சீட்டு வழங்கப்படும். கொடுக்கப்பட்ட அந்த ஒரு நாளைக்கு மட்டுமே அப்பயணச் சீட்டு செல்லுபடியாகும். முக்கியப் பேருந்துக் கட்ட நிலையங்களில் இப்பயணச் சீட்டுகள் விற்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

நெல்லை--அருப்புக்கோட்டை நகராட்சிகள்

சென்னை, செப். 15—

முன்பிருந்த காங்கிரசு ஆட்சியினரால் கலைக்கப்பட்ட நெல்லை, அருப்புக்கோட்டை நகராட்சிகள், அறிஞர் அண்ணா பிறந்த நாளான இன்றுமுதல் செயல்படுகின்றன.

இரு நகராட்சிகளையும் கலைக்கும் ஆணை இன்று நீக்கப்பட்டது.

அரசு ஊழியர்கட்குத் திருமண உதவி கடன்

சென்னை, செப். 15—

அரசு ஊழியர்களுக்கு திருமணச் செலவுக்கென ரூ. 3,000 வரை கடன் கொடுக்க தமிழக அரசு முடிவு செய்துள்ளது. இந்தத் தொகைக்குக் குறைந்த வட்டியே வசூல் செய்யப்படும். கடனை 5 ஆண்டுக் காலத்தில் தவணை முறையில் திருப்பிக் கொடுக்கலாம்.

இத்திட்டத்தை உடனடியாக நடைமுறைக்குக் கொண்டுவர தமிழக அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

அண்ணாவைத் 'தம்பி' என்று அழைத்த நரைமூதாட்டியார்!

திருச்சி மாவட்டத்தில் பொதுத் தேர்தல் நடக்குமுன் ஒரு நாள்; 18—2—1967; முன்னிரவு நேரம்; எங்கெங்கோ சுற்றி அலைந்து--காடுமேடெல்லாம் சுற்றி--கார் போக முடியாத புள்ளம்பாடி வாய்க்கால் கரைவழியாகவெல்லாம் போய்வந்த பிறகு--அண்ணா அவர்கள், அரண்மனைக்குறிச்சி என்ற சின்னஞ்சிறு கிராமத்தில் பேசினார்கள்.

கூட்டம் முடிந்து அண்ணா அவர்கள், வண்டியில் அமர்ந்துவிட்டார்கள்; திடீரென்று ஒரு தோழர் ஓடிவந்தார்; 'அண்ணா, கொஞ்சம் அப்படியே இருந்துக்குங்க; இந்தப் பெண்டுகளெல்லாம் உங்களைக் காணணுமாம்' என்றார். அண்ணா அவர்கள் இறங்க முனைந்தார். இன்னொருவர் ஓடிவந்தார்; 'அண்ணா, இறங்காதீர்கள்; கீழே சேருக இருக்கு; உட்கார்ந்துகொண்டே இருங்கள்; அவர்கள் பார்த்துக்கொண்டே போவார்கள்' என்றார்.

அண்ணா அவர்கள், காரின் 'முன் சீட்டில்' அமர்ந்திருக்கிறார்—டிரைவர் அருகே கைகூப்பிப்படி; வலப்புறமிருந்து வரிசையாய்த் தாய்மார்கள் ஒவ்வொருவராய் வந்து பார்த்துக் கைகூப்பிச் செல்கிறார்கள்; 'இவகதான் நம்ம முதன் மந்திரியா வரப்போராக' என்ற குசுகுசுப் பேச்சு; ஒரு மூதாட்டியார்--80 வயது இருக்கும்—

"தம்பி! முதல் மந்திரியானப்புறம், இங்கே ஒருமுறை வந்து போங்கய்யா"

என்று முகத்தில் மகிழ்ச்சி பொங்க, முன்கூட்டி அழைப்பு விடுத்துச் சென்றார்!

அண்ணாவைத் 'தம்பி' என்றழைத்த அந்த நரைமூதாட்டியாரைப் பார்த்துப் புன்னகைத்தனர் தோழர்கள்!

கைகூப்பிக் கொண்டிருந்த அண்ணா அவர்கள் — முகத்தில் மென்னகை அரும்பிட — 'வருகிறேன்' என்று தலையசைத்தார்!

படியரிசி போட்ட புண்ணியவான்!

கடலூர் சி. கந்தசாமி மகளிர் கல்லூரியில் அடிக்கல் நாட்டு விழா நடைபெற்றுக் கொண்டிருந்தது; ஒரு பக்கத்தில் மாவட்ட அதிகாரிகள் வரிசையாக அமர்ந்து இருந்தார்கள்; இன்னொர் பக்கத்தில் கல்லூரி மாணவிகள் நெருக்கமாக அமர்ந்து இருந்தார்கள்; சுற்ற டைப்பைச் சுற்றி மக்கள் கூட்டம் நிரம்பி இருந்தது.

மேடையில் தமிழக முதலமைச்சர் சி. என். அண்ணாதுரை, டாக்டர் ஏ. இராமசாமி முதலியார், அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் ஆகியோர் வீற்றிருந்தனர்.

அமைச்சர் ஏ. கோவிந்தசாமி 'மைக்' முன்பு நின்று பேசிக் கொண்டிருந்தார். திடீரென்று கூட்டத்தின் முன்பு ஒரு கூடைக்காரம்மா வந்து யாரையோ தேடிப் பார்த்தார்; கூட்டத்தில் பரபரப்பு ஏற்பட்டது; கூட்டத்தை ஏற்பாடு செய்தவர்கள், என்ன சொல்லுவது என்று தெரியாமல் தவித்தார்கள்!

'மேடைக்கு ஏனம்மா வந்தீர்கள்?' என்று செய்தியாளர் கேட்டபோது,

"ரூபாய்க்கு ஒரு படி அரிசி போடுற புண்ணியவானைப் பார்க்கப் போனேங்க"

என்று அந்தக் கூடைக்காரம்மா கூறினார்.

—'தினக்கதிர்'

தமிழர் பெற்ற தனிப் பெருஞ் செல்வம்

"இன்று செல்வத்திலே—சீரடைவதிலே — தொழில் துறையிலே—மிகவும் பின்தங்கியுள்ளோம்; ஆனால் நம்மிடத்தில் கலைச் செல்வம் வேண்டும் அளவுக்கு இருக்கிறது.

"தமிழ்ச் செல்வம், யாரும் பெற முடியாத செல்வமாக இருக்கிறது; பண்பாட்டுச் செல்வம் யாருக்கும் — எந்த நாட்டிற்கும் கிட்டாத அளவில் கிடைத்திருக்கிறது.

"இரஷ்யாவோடு நாம் போர்க் கருவிகளிலே போட்டியிட முடியாது — அறிவியல் வளர்ச்சியிலே நாம் போட்டியிட முடியாது; ஆனால், இலக்கியத்திலே போட்டியிட முடியும்!

"அப்படிப்பட்ட இலக்கியச் செல்வம் நம்மிடத்திலே இருக்கிறது; அதில் தலையாய செல்வம் திருக்குறள்!

"அந்தக் குறள் வகுப்பறையில் மட்டுமல்லாமல் — உங்கள் இல்லங்களில் மட்டுமல்லாமல்— உலகத்தார் உள்ளங்களிலெல்லாம் பரவும் வகை செய்தல் வேண்டும்!

"குறளைக் கற்று நீங்கள் செம்மைப்பட்டு — நீங்கள்செம்மைப் படுவதால் நாடு செம்மைப் பட்டு--நாடுசெம்மைப்படுவதால் உலகு செம்மைப்படச் செய்ய வேண்டும்.

"நாங்கள் எதிர்பார்க்கிற தமிழ் வளர்ச்சி—'தமிழ் ஆட்சி மொழியாகும்' என்ற நம்பிக்கை உறுதியாகும் வகையில், இங்கு தமிழ் முழங்குவது பாராட்டுக்குரியது ஆகும்."

---அறிஞர் அண்ணா

(அரசிமேரி கல்லூரி வள்ளுவர் விழாவில்)

வங்கத்தில் அறிஞர் அண்ணா பிறந்த நாள் விழா

கல்கத்தா(ஹௌரா)விலுள்ள வங்கத் தமிழர் சங்கத்தின் சார்பில், அறிஞர் அண்ணா பிறந்த நாள் விழா 24—9—67 அன்று மிகச் சிறப்பாகக் கொண்டாடப் படவிருக்கிறது.

கல்கத்தாவிலும் ஹௌராவிலும உள்ள எல்லாத் தமிழர் அமைப்புகளும் இவ்விழாவில் பங்குகொள்ளவிருக்கின்றன.

இத்தகைய விழாவில் இங்குள்ள தமிழர்கள் அமைப்புக்கள் அனைத்தும் ஒன்றாக இணைந்து கொண்டாடுவது இதுவே முதல் முறையாகும். இவ்விழாவை வங்கத் தமிழர் சங்கம் முன்னின்று நடத்துகிறது என்று, மேற்படி சங்கத் தலைவர் திரு. டி. என். தங்கதுரை அறிவிக்கிறார்.

அண்ணாவைப் பற்றி அண்ணாவின் ஆசிரியர்!

"சி. என். ஏ., 1928 முதல் 1933 வரை ஐந்து வருடங்கள் பச்சையப்பன் கல்லூரியில் இன்டர், பி. ஏ. ஆனர்ஸ் வகுப்புகளில் படித்தார். இருக்கிற இடமே தெரியாத அளவிற்கு மிகவும் அமைதியாக இருப்பார். எந்த வித ஆர்ப்பாட்டங்களையும்அவர் செல்வதில்லை. பேராசிரியர்களிடம் மிகவும் மரியாதை உள்ளவராக இருந்தார். கல்லூரித் தேர்வுகளில் முதலிடம் வகித்தும், பல பரிசுகளைப் பெற்றும், பேராசிரியர்கள், பிரின்சுபால் ஆகியோரின் கவனத்தை அடிக்கடி கவர்ந்தவர்!

"ஒரு நிகழ்ச்சி இப்போதும்கூட எனக்குப் பசுமையாக நினைவில் இருக்கிறது; ஒருமுறை, பரிசு பெற்றவர்களின் பெயர்ப் பட்டியலிலிருந்து 'முதல் பரிசு—சி. என். அண்ணாதுரை' என்று அழைத்தேன்; மேடைக்கு அருகே வந்த அண்ணாதுரை, விழாத் தலைவருக்கு தலைகுனிந்து வணக்கம் செலுத்தினார். அதே போல், கூட்டத்தினரையும் தலை வணங்கினார். பிறகு பரிசைப் பெற்றுக்கொண்டு மீண்டும் ஒரு முறை தலைவணங்கிவிட்டு, நடந்தார்.........

"பிறகு பல பொது மேடைகளில், 'நான் பெற்ற உயர்விற்குப் பச்சையப்பன் கல்லூரியும், நானும் காரணம்' என்று அவர் பாராட்டக் கேட்டு மகிழ்ந்திருக்கிறேன்.

"முதலமைச்சரான பிறகு அண்ணாதுரையை ஒரு முறை அவர் வீட்டிலும் இன்னொரு முறை மாநாட்டிலும் சந்தித்தேன். என்மீது ஆழ்ந்த மரியாதையைக் கொட்டினார் அவர். மே மாதம் 13, 14, 15 ஆகிய நாட்களில் உதகையில் நடந்த 57-வது கல்வி மாநாட்டில், 14-ந் தேதி பிற்பகல் முதலமைச்சர் பேசினார். அப்போது மிகுந்த அன்புடன் என்னிடம் கற்றுக்கொண்ட பாடத்தைப் பற்றி மிக உயர்வாகப் பேசினார் அவர்.

"திறமை மிக்க பேச்சு அவருடையது. தன்னால் முடிந்ததைக் கட்டாயம் செய்வார் என்ற நம்பிக்கையை நம்மிடமிருந்து முழு அளவில் பெற்றுவிடுகிறார். எல்லாவற்றையும்விட, காங்கிரசல்லாத மாநிலங்களிலுள்ள முதலமைச்சர்களில், இவர் ஒருவர்தான் மத்திய சர்க்காரைப் புரிந்து கொள்ள முயலுகிறவர்—புரிந்து கொண்டு இருக்கிறார்! இந்த ஆறு மாதத்தில், தலைவருக்கேற்ற உயர்ந்த நிலைக்குத் தன்னை உயர்த்திக்கொண்டுவிட்டார்!

"இவரிடம் இவ்வளவு சாமர்த்தியங்கள் மறைந்திருக்குமென்று நான் நினைத்ததில்லை. நான் முதல்வராக இருக்கும்போது, ஒவ்வொரு வருடமும் எங்கள் கல்லூரியில் பேச இவரை அழைப்பேன். அவர் தமிழில் பேசினாலும் சரி—ஆங்கிலத்தில் பேசினாலும்சரி—அழகும் ஆவேசமும்மிக்க பேச்சு அவருடையது! அவர் பேச்சைக் கேட்க கல்லூரியில் பெரும் கூட்டம் கூடும்!"

—பேராசிரியர்

ஆர். கிருஷ்ணமூர்த்தி

(பச்சையப்பன் கல்லூரி முன்னாள் முதல்வர்)

'ஆனந்த விகடன்': 17-9-67

நடக்க இருப்பவை :

அறிஞர் அண்ணு பிறந்த நாள் விழாப் பொதுக்கூட்டங்கள்

17--9--67

வல்லம்

தி. மு. க. சார்பில் இரவு 7-மணிக்கு மாரியம்மன் கோயில் திடலில்; தலைவர்: டி. பாப் ஜான்; பேசுவோர்: மு. இராம நாதன், மற்றும் பலர்.

பெரியகுளம்

தி. மு. க. சார்பில் இரவு 8-மணிக்கு பேருந்து நிலையம் அருகில்; தலைவர்: மை. கா. முகமது மைதீன்; பேசுவோர்: அமைச்சர் மா. முத்துச்சாமி, கே. எம். எம். மேத்தா எம்.எல். ஏ., சி. கண்ணுசாமி.

உலிபுரம்

தி. மு. க. சார்பில் இரவு 7-மணிக்கு; தலைவர்: போ. நல்லப்பன்; பேசுவோர்; ப. க. தமிழழகன், என். செயராமன், மு. சீத்தாராமன், ஆ. தி. ர. துரைசாமி, துரை. பட்டாபி ராமன், பி. செகநாதன். [விளையாட்டுப் போட்டியில் வெற்றி பெற்றோருக்கு ஏ. கிருஷ்ண மூர்த்தி பரிசளிப்பர்.]

சிவகாசி

தி. மு. க. சார்பில் இரவு 7-மணிக்கு பாவடித் திடலில்; பேசுவோர்: தேவகி பாண்டியன், மற்றும பலர்.

18--9--67

இராசபாளையம்

தி. மு. க. சார்பில் மாலை 6 மணிக்கு துரைசாமிபுரத் தெருவில்; தலைவர்: ஆறுமுகம்; பேசுவோர்: டாக்டர் சேதுராசன், மற்றும் பலர்.

ஊத்துக்குளி

தி. மு. க. சார்பில் மாலை 6 மணிக்கு; தலைவர்: முத்துசாமி; பேசுவோர்: மு. சின்னச்சாமி எம்.எல்.ஏ., க. அன்பரசு' எஸ். ஆர். சென்னியப்பன், அ. தங்கமுத்து.

விழுதியூர்

தி. மு. க. சார்பில் மாலை 6 மணிக்கு சூராவளித் திடலில்; தலைவர்: நா. பரசுராமன்; பேசுவோர்: புலவர் அறிவுடைநம்பி, எஸ். இராமசாமி பி.எஸ்சி., பி.எல்., ஏ. அப்துல்முகமது, ப. அ. கரீம், எஸ். சண்முகம்.

மணப்பாறை

தி. மு. க. சார்பில் இரவு 7 மணிக்கு காய் கனிச் சந்தைத் திடலில்; தலைவர்: இரா. துரையரசன்; பேசுபவர்: அமைச்சர் செ. மாதவன். (கே. வி. எஸ். கிருஷ்ணன் தலைமையில் ஏழைகளுக்குப் பகலுணவு வழங்கப்படும்.)

அம்மையப்பன்

தி.மு.க., எம்.ஜி.ஆர். மன்றச் சார்பில் இரவு 8 மணிக்கு புலவர் அறிவுடைநம்பி பேசுவார். மாலை 6 மணிக்கு மாணவ -- மாணவிகளுக்கு பேச்சு, பாட்டுப் போட்டி நடைபெறும்.)

பேகம்பூர்

தி. மு. க. சார்பில் இரவு 7-மணிக்கு பேட்டை சாலையில்; தலைவர்: கே. ஏ. சமால் மைதீன்; பேசுவோர்: சிற்றுளி சுப்பிரமணியம், அ. தங்கவேல், க. வே. விக்கிரமாதித்தராசன், எம். பிச்சை.

கிரமங்கலம்

தி. மு. க. சார்பில் மாலை 6-மணிக்கு வேம்பங்குடி கலைவாணர் திடலில்; தலைவர்: ஆர். பெரியதம்பி; பேசுவோர்: என். எஸ். இளங்கோ, ஆ. துரையரசன் எம்.எல்.ஏ., எம். கிருட்டினமூர்த்தி எம்.எல்.ஏ., புலவர் ச. இராமசாமி, எஸ். பக்கிரி மஸ்தான்.

வேடசந்தூர்

தி மு. க. சார்பில் இரவு 7-மணிக்கு மாரியம்மன் கோயில் எதிரில்; தலைவர்: எஸ் வி ஆறுமுகம்; பேசுவோர்: இராமலிங்கம் பி.ஏ.பி.எல், ப. முத்துச்சாமி பி ஏ.பி.எல்., செ. தம்பித்துரை, வி. நாகசுந்தரம். (இரவு 10-மணிக்கு முருகு பாண்டியன் குழுவினரின் பல குரல் கலைநிகழ்ச்சி நடைபெறும்).

குளித்தலை

கலைஞர் கருணாநிதி மன்றச் சார்பில் மாலை 6-மணிக்கு திரு. வி. க. திடலில்; தலைவர்: கு. வீ. முத்துச்சாமி; பேசுவோர்: ஏ. வி. பி. ஆசைத்தம்பி எம்.எல்.ஏ., எம். கந்தசாமி பி.ஏ.பி.எல்., எம்.எல்.ஏ., குளித்தலை முத்து கிருஷ்ணன், என். பாலன் பி.ஏ. பி.எல்., என். நல்லுசாமி பி.ஏ. பி.எல்., கே. அப்துல் அஜீஸ், ஆ. பெ. கிருஷ்ணன்.

குடியேற்றம்

தி. மு. க. சார்பில் மாலை 6-மணிக்கு கோபாலபுரம் பகுதி தெருவில்; தலைவர்: வி. ஏ. கனி; பேசுவோர்: எஸ். இராகவானந்தம் எம்.சி., ஜி. குசேலர் எம்.பி., பி. செயராமன் எம்.எல்.ஏ.

அரக்கோணம்

அண்ணு மன்றச் சார்பில் மாலை 6-மணிக்கு தர்மராசா கோயில் அருகில்; தலைவர்: என். எஸ். பலராமன்; பேசுவோர்: அமைச்சர் சாதிக் பாட்சா, ஏ. கே. வேலன், எஸ். கே. சம்பந்தம் பி.ஏ., எம்.பி., எஸ் ஜே. இராமசாமி எம்.எல்.ஏ., ஆர். என். அரங்கநாதன் எம்.எல்.ஏ., என். வீராசாமி எம்.எல்.ஏ.

திருச்சி 26-வது வட்டம்

எம். ஜி. ஆர். மன்றச் சார்பில் மாலை 6-மணிக்கு வரகனேரி முதல் தெருவில்; தலைவர்: ந. ஆறுமுகம்; பேசுவோர்: சி. தமிழரசி பி.ஏ., எம். எஸ். மணி எம்.எல்.ஏ., அ. நடராசன், மா. பாலகிருஷ்ணன், வி. கிருஷ்ணமூர்த்தி, சு. மா- நடராசன்.

சென்னை 6-வது வட்டம்

அண்ணு மறுமலர்ச்சி மன்றச் சார்பில் இரவு 7 மணிக்கு பேரம்பாலு செட்டி தெருவில்; தலைவர்: அ. நாகலிங்கம்; பேசுவோர்: புலவர் பொன்னிவளவன், புலவர் கபிலன், செங்குட்டுவன், மு. சத்தியநாதன், கேரளீயன். கே. குசால்தாஸ் இனிப்பு வழங்குவார்! அ. ஜெ. அ. சிவா, எஸ். ஆர். கோபால், ஏ. எஸ். மணி ஆகியோர் கஞ்சி ஊற்றுவர்.

திருச்சி

வள்ளுவர் மன்றச் சார்பில் இரவு 9 மணிக்கு (அண்ணு திடலில் (புகைவண்டி நிலையம் அருகில்); தலைவர்: முகமது அனிபா; பேசுவோர்: கே. பி. சுப்பையா பி.ஏ., எம்.எல்.ஏ., பரமேசுவரன், ஏ. வி. கே. கிருட்டினமூர்த்தி, தென்றலடியான், 'எம். கே. கரிகாலன், சி. பி. ஆனந்த். (இரவு 10 மணிக்கு கண்ணம்மா—தங்கராசு குழுவினரின் கலை நிகழ்ச்சி நடைபெறும்.)

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு, அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-13, அச்சிட்டு வெளியிடப்பெறுகிறது.

விழா நிகழ்ச்சிகள்

சென்னையில் :

1-வது வட்டத்தில்

செரியன் நகர் மக்கள் மறுமலர்ச்சி மன்றச் சார்பில் எம். ஏ அனிபா தலைமையில் து.கோவிந்தசாமி கொடியேற்றி வைப்பார்; அண்ணு படத்தை எம். ஆர். கண்ணன் எம்.எல்.ஏ.திறந்துவைப்பார்

வள்ளுவர் மன்றச் சார்பில் காலை 9-மணிக்கு கோ. விசுவநாதன் தலைமையில் க. அறிவழகன் எம்.எல்.சி., து. கோவிந்தசாமி மற்றும் பலர் கலந்துகொள்வர்; சர்க்கரைப் பொங்கல் வழங்கப்படும்.

2-வது வட்டம்

தி. மு. க. கிளை சார்பில் மாலை 6-மணிக்கு சே. அரசு தலைமையில் மு. வேதாசலம் எம்.எல்.ஏ. முன்னிலையில் 500 பேர்களுக்குஇனிப்பு வழங்கப்படும்.

தண்டையார்பேட்டை

முத்தமிழ் மன்றச் சார்பில் காலை 9-மணிக்கு மன்றப் பணிமனையில் பி. ஜி. கபாலி தலைமையில் ஆர். சுந்தரம் கொடியேற்றுவார்; ஆ. கோ. பெருமாள் அம்பேத்கார் படத்தையும், பூ.நாகலிங்கம் காந்தியார் படத்தையும் திறந்துவைப்பர்; எச். வி. ஹண்டே எம். எல்.ஏ., மு. வேதாசலம் எம்.எல். ஏ., என். கே. வீரஜின்னு, மைனர் மோசஸ், சிலார்மியான் எம்.சி. ஆகியோர் பேசுவர்.

4-வது வட்டத்தில்

காலை 9-மணியளவில் 4-வது வட்டத்தில் கீழ்காணும் இடங்களில் நிகழ்ச்சிகள் நடைபெறும் ;—

4-வது வட்ட தி. மு. க. சார்பில் காலை 9-மணிக்கு வட்டச் செயலாளர் பி. கே. மூர்த்தி தலைமையில் துணைச் செயலாளர் கே. முனுசாமி கொடியேற்றிவைப்பார்; பெயர்ப் பலகையை பேராசிரியர் அறிவழகன் எம்.எல்.சி. திறந்து வைப்பார்; இ. இராசகோபால் இனிப்பு வழங்குவார்; மு. வேதாசலம் எம்.எல்.ஏ., கே. எம். கண்ணபிரான், த. சேதுராசன், குசால்தாசு ஆகியேரர் உரையாற்றுவர். பகல் 1-மணிக்கு பொறிக்கடலை வியாபாரி கணேசன் தலைமையில் ஏழைகளுக்கு உணவு வழங்கப்படும்.

கலைவாணர் படிப்பகச் சார்பில் காலை 9-மணிக்கு கோவிந்தசாமி தலைமையில், வட்டச் செயலாளர் பி. கே. மூர்த்தி கொடியேற்றி வைப்பார்; மன்றப் பொருளாளர் சொக்கலிங்கம் இனிப்பு வழங்குவார்; மணிமாறன் நன்றியுரை ஆற்றுவார்; என். வி. என். சோமு பி.ஏ. சிறப்புரையாற்றுவார்.

மக்கள் திலகம் ரசிகர் மன்றச் சார்பில் காலை 9-மணிக்கு வட்டத் துணைச் செயலாளர் கே. முனுசாமி தலைமையில் வட்டச் செயலாளர் பி. கே. மூர்த்தி கொடியேற்றி வைப்பார்; மன்றத் தலைவர் தயாளன் இனிப்பு வழங்குவார். கோதண்டன், மற்றும் பலர் பேசுவர்; என். வி. என். சோமு பி.ஏ., பேராசிரியர் அறிவழகன் எம்.எல். சி. ஆகியோர் சிறப்புரையாற்றுவர்.

நாவலர் படிப்பகச் சார்பில் காலை 8-30 மணிக்கு வட்டச் செயலாளர் பி. கே. மூர்த்தி தலைமையில் பேராசிரியர் அறிவழகன் எம்.எல்.சி. கொடியேற்றுவார்; என்.வி.என். சோமு பி.ஏ. அண்ணு படத்தைத் திறந்துவைப்பார்; கண்ணபிரான், குசால்தாசு, சேதுராசன், கே. முனுசாமி ஆகியோர் உரையாற்றுவர். மன்றச் செயலாளர் மணி இனிப்பு வழங்குவார்.

சி. பி. சி. படிப்பகச் சார்பில் காலை 9-மணிக்கு மன்றச் செயலாளர் செயராமன் தலைமையில் மூர்த்தி கொடியேற்றுவார்; அண்ணுமலை இனிப்பு வழங்குவார்.

அண்ணு படிப்பகச் சார்பில் காலை 9-மணிக்கு கே. முத்து தலைமையில் மூர்த்தி கொடியேற்றுவார்; ரூபானந்தம் இனிப்பு வழங்குவார்; என்.வி.என். சோமு பி.ஏ., க. அறிவழகன் எம்.எல்.சி. சிறப்புரையாற்றுவார்.

திருவில்லிபுத்தூரில் அண்ணு பிறந்த நாள் விழாப் பொதுக்கூட்டங்கள்

அண்ணு பிறந்த நாள் விழாவினையொட்டி திருவில்லிபுத்தூர் தி. மு. கழகச் சார்பில் நடைபெறும் பொதுக்கூட்டங்களில் கலந்து கொள்வோர் :—

செப். 17: மதுரை கோவிந்தராசன் எம்.ஏல்.ஏ.; 18: நெல்லைமாறன்; 19: மதுரை கூடலரசன்; 20: மதுரை முத்தரசு; 21: தா. கிருட்டினன் எம்.ஏ., எம்.பி.; 22: மதுரை காவேரி மணியம் பி.ஏ.பி.எல்.; 24: அக்கினி ராசு பி.ஏ., எம்.எல்.ஏ.; 26: நடிகர் கண்ணன்.

குடந்தை இராமலிங்கம் நினைவு மன்றச் சார்பில் காலை 9-மணிக்கு துலுக்காணம் தலைமையில் பி. கே. மூர்த்தி கொடியேற்றுவார்; முருகேசன் இனிப்பு வழங்குவார்; சோமு, அறிவழகன், கே. முனுசாமி, கே. எம். கண்ணபிரான், சேதுராசன் ஆகியோர் உரையாற்றுவர்.

எம். ஜி. ஆர். படிப்பகச் சார்பில் காலை 9-மணிக்கு மாரியப்பன் தலைமையில் மூர்த்தி கொடியேற்றுவார்; மன்றச் செயலாளர் சோமசுந்தரம் இனிப்பு வழங்குவார்; என். வி. என். சோமு பி.ஏ., பேராசிரியர் அறிவழகன் எம்.எல். சி. ஆகியோர் உரையாற்றுவார்கள்.

கே. எஸ். பாண்டியன் நினைவு மன்றச் சார்பில் காலை 9-மணிக்கு மன்றச் செயலாளர் சுந்தரராசன் தலைமையில் முனிரத்தினம் கொடியேற்றுவார்; தோழர் மது இனிப்பு வழங்குவார்.

6-வது வட்டம்

நாவலர் இரா. நெடுஞ்செழியன் மன்றச் சார்பில் காலை 9-மணிக்கு நாராயணப்ப நாய்க்கன் தோட்டத்தில் செயராமன் தலைமையில், மு வேதாசலம் எம்.எல்.ஏ. கொடியேற்றுவார்; 500 பேருக்கு சர்க்கரைப் பொங்கல் வழங்கப்படும்.

12-வது வட்டம்

ஏழுகிணறு எம். ஜி. ஆர். கலை ரசிகர் மன்றச் சார்பில் காலை 10-மணிக்கு குமரப்ப முதலி தெருவில் மறைமலை தலைமையில் டாக்டர் அபிபுல்லா பேக் உணவு வழங்குவார்; ஆர். கே. சண்முகம், ஜி. இலட்சுமிபதி எம்.சி., வி. எஸ். பார்த்தசாரதி, பகலவன் ஆகியோர் பேசுவர்.

21-வது வட்டத்தில்

கலைவாணர் என். எஸ். கே. நினைவுமன்றச் சார்பில் காலை 9-மணிக்கு எஸ். சீனிவாசன் தலைமையில் கே. எம். தீனதயாளன் கொடியேற்றுவார்; எம். ஆர். கண்ணன் எம்.எல்.ஏ. அண்ணு படத்தைத் திறந்துவைப்பார்; சு. மோகனராசு உணவு வழங்குவார்; து. வேணுகோபால் எம்.சி., எஸ். ஏ. செல்லையா, ந. சு. மணி, கே. சுந்தரம், எஸ். சந்திரன், ஜெகதீசன், வேணுகோபால் ஆகியோர் பேசுவர்.

தி. மு. க. ஆதரவாளர்கள் சார்பில் மேயர் பாசுதேவ் தெருவில் காலை 9-மணிக்கு ஞா. பாண்டியன் தலைமையில் தீனதயாளன் கொடியேற்றுவார்; எம். ஆர். கண்ணன் எம்.எல்.ஏ. அண்ணு படத்தைத் திறந்துவைப்பார்; து. வேணுகோபால் எம்.சி. உணவு வழங்குவார்; பலர் பேசுவர்.

எம். ஜி. ஆர். படிப்பகச் சார்பில் காலை 10-மணிக்கு, க. பக்தவத்சலம் தலைமையில் மோகனராசு கொடியேற்றுவார்; து. வேணுகோபால் அண்ணு படத்தைத் திறப்பார்; எம். ஆர். கண்ணன் எம்.எல்.ஏ. உணவு வழங்குவார்.

தி. மு. க. ஆதரவாளர்கள் சார்பில் காலை 9-மணிக்கு திருவொற்றியூர் நெடுஞ்சாலையில் விழா நடைபெறும்.

32-வது வட்டம்

அறிவு வளர்ச்சி மன்றச் சார்பில், காலையில் ஜி. பொன்னன் தலைமையில் எஸ். இராகவானந்தம் கொடியேற்றுவார்; க. அன்பிற்கரசன், பி. ஆர். பழனிச்சாமி, மா. பொ. வேதாசலம் ஆகியோர் பேசுவர்; ஜி. குசேலர் எம்.பி. தலைமையில் 1,500 பேருக்கு உணவளிப்பு; அண்ணு பட ஊர்வலம் உண்டு.

35-வது வட்டம்

மங்களபுரி அறிவு வளர்ச்சி மன்றச் சார்பில் காலை 10-மணிக்கு சந்திரயோகி சமாதி சாலையில் மு. மூர்த்தி தலைமையில் கோ. லோகநாதன் எம்.சி. கொடியேற்றிவைப்பார்; அமைச்சர் சத்தியவாணிமுத்து முன்னிலையில் 1,000 பேருக்கு உணவளிக்கப்படும்.

சென்னை 39-வது வட்டம்

ஊ.பு.அ. சௌந்தரபாண்டியனர் நினைவுப் படிப்பகச் சார்பில் காலை 9 மணிக்கு ஆலத்தூர் சுப்பிரமணிய ஆச்சாரி தெருவில் மா. நடராசன் தலைமையில் டி. கே. இளங்கோ கொடியேற்றுவார்; க. செல்வராசன் இனிப்பு வழங்குவார்; க. அறிவழகன் எம்.எல்.சி., எம். முத்துசாமி எம்.ஏ., வ. இராசமனோகரன் எம்.ஏ., இரா. சனார்த்தனம் பி.ஏ., எம். வரதராசுலு எம்.சி., டபிள்யூ. எம். இராமச்சந்திரன் ஆகியோர் பேசுவர்.

சென்னை 42-வது வட்டம்

பகுத்தறிவு மன்றச் சார்பில் விழாக் கொண்டாடப்படும்; திருமதி இராணி அண்ணு அவர்கள், போட்டிகளில் வெற்றி பெற்றவர்கட்கு பரிசு வழங்குவார்கள்.

சென்னை 72-வது வட்டம்

தி. மு. கழகச் சார்பில் காலை 10 மணிக்கு திருவட்டீசுவரன் பேட்டையில் மு. வரதராசன் கழகக் கொடியேற்றுவார்; டி. லோகநாதன் தலைமையில் எஸ். எம். கிருட்டினன் எம்.சி. 500 பேருக்கு உணவு வழங்குவார்.

சென்னை 81-வது வட்டம்

சென்னை 81-வதுவட்டம் தி.மு.க. சார்பில் காலை 8-மணிக்கு முதலியாண்டான் தோட்டம் இளங்கோ சாலையில் இரா. அகவழகன் கொடியேற்றுவார்; மா. பொ. சிவஞானம் எம்.எல்.ஏ. இனிப்பு வழங்குவார்; டி. வி. நாராயணசாமி, வை. பாலசுந்தரம், புசு. இலக்குவன், அ. டேனியல், ஏ. சுப்புக்கண்ணு, பார்த்தசாரதி, பழனி, ஆகியோர் பேசுவர்.

சென்னை 84-வது வட்டம்

தமிழ் இலக்கிய மன்றச் சார்பில் காலை 9-மணிக்கு கே. கோவிந்தசாமி எம்.சி., தலைமையில் நடிகை விசயகுமாரி கொடியேற்றி வைப்பார்; அரசி மேரி கல்லூரி தலைமை ஆசிரியை திருமதி ஐராவதி அம்மையார் இனிப்பு வழங்குவார்; இராம. அரங்கண்ணல், இளம்பரிதி, கோமகன் மற்றும் பலர் பேசுவர்.

அறிவு வளர்ச்சி மன்றச் சார்பில் காலை 8-30 மணிக்கு ஆர். லோகநாதன் தலைமையில் கன்னியப்பன் கொடியேற்றி வைப்பார்;

காலை 9-மணிக்கு லூதர் போர்டு மீனும்பாள்புரம் சார்பில் இராம அரங்கண்ணல் கொடியேற்றி வைப்பார்.

காலை 10 மணிக்கு நொச்சிகுப்பம் எஸ். எஸ். ஆர். மன்றத்தில் அமைச்சர் கோவிந்தசாமி, இராம அரங்கண்ணல் எம்.எல்.ஏ., கே. கோவிந்தசாமி எம்.சி. ஆகியோர் கலந்துகொள்ளும் விழா.

அரும்பாக்கம்

கலைவாணர் பொதுநல மன்றச் சார்பில் காலை 10 மணிக்கு சோ. மா. இராமச்சந்திரன் முன்னிலையில் ஆயிரம் பேருக்கு உணவளிக்கப்படும்.

அண்ணு பிறந்த நாள் நிகழ்ச்சிகள்---ஓர் அறிவிப்பு

அண்ணு பிறந்த நாள் விழாவையொட்டி, நாளையும் மறுநாளும், சென்னையிலும் வெளியூர்களிலும் நடைபெறவிருக்கும் ஏராளமான நிகழ்ச்சிகள் பற்றிய செய்திகள் வந்திருக்கின்றன. இடமின்மை காரணமாக அத்தனை நிகழ்ச்சிகளையும் 'நம் நாடு' இதழில் வெளியிட இயலவில்லை; பொறுத்தருள வேண்டுகிறோம். (ஆ—ர்)